# நவீனரக ஆயுதங்கள் கொள்வனவு செய்ய அரசு அவசர நடவடிக்கை


விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 26 இதழ் 94
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9 - 5 - 1995


(கொழும்பு)

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு நவீன ரக ஆயுதங்களை பல வெளிநாடுகளிடமிருந்தும் கொள்வனவு செய்ய அரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் இரு அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்திய பிறகு வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல்களை இந்தியா அவதானிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பது பற்றியும், விமானங்களை சுட்டு வீழ்த்தியிருப்பது பற்றியும் இந்தியா உன்னிப்பாக அவதானித்துவருவதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்,

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ புலிகளின் தாக்குதல் அணி 10 நிமிடத்தில்

# அம்பாறையில் பாரிய தாக்குதல்

# 19 எஸ். ரி. எவ். படையினர் பலி

## - ஆயுதங்களும் மீட்பு -

(யாழ்ப்பாணம்)

**அம்பாறையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்பிரிவினர் நேற்று மேற்கொண்ட பாரிய தாக்குதலில் மூன்று அதிகாரிகள் உட்பட 19 அதிரடிப் பொலிசாரும் ஒரு தேசத் துரோகியும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.**

நேற்றுக் காலை அம்பாறை கஞ்சிகுடிச்சாறு அதிரடிப் படை முகாமிலிருந்து திருக்கோவிலுக்கு உழவுஇயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் 10 நிமிட நேர தீரமிகு தாக்குதலின்போது படைபணியில் வந்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

விசேட அதிரடிப் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரமும் மின்பிறப்பாக்கி

(6-ம் பக்கம்பார்க்க)

## புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பு

(லண்டன்)

மோதல தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த பின் விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதல் நடவடிக்கையை அதிகரித்துள்ளனர்.

நேற்றுக்காலை அம்பாறை- கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் பலியானதுபற்றி விளக்கிக் கூறிய பி. பி. சி. முகவர் ஜோர்ஜ் ஆனி இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் இதுபற்றி

(6-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலில் இளம்பெண் படுகாயம்

(நெல்லியடி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதியில மக்கள் குடியிருப்புகளை நோக்கி இரவு வேளை நடாத்தப்பட்ட அகோர ஷெல் வீச்சினுல் பல வீடுகள் உடைந்து நொருங்கியதுடன் பல மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

இளம் யுவதி ஒருவர் வலது கையில் படுகாயம் அடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு (ஞாயிறு) 8-45 முதல் 9-30 மணிவரை இடம் பெற்றது,

(5ம் பக்கம் பார்க்க)

## மறு அறிவித்தல் வரை படகுச்சேவை நடைபெறுது

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரிபடகுச் சேவை சீரற்ற காலநிலை காரணமாக இன்று முதல் மறுஅறிவித்தல் வரை நடைபெற மாட்டாது என விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## வளலாய் பகுதியில் ஆட்லறி தாக்குதல்

[வடமராட்சி,

வளலாய் இராணுவமுகாம் பகுதியில் பாரிய வெடிச் சத்தங்கள் நேற்றுமுன் தினம் கேட்டன.

இரவு 8-45 மணியளவில் பரா வெளிச்சம் அடித்தபடியே மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதலை படையினர் நடாத்திய வண்ணமாயிருந்தனர். 51-இ

## தேசவிரோத செயல்களில் ஈடுபட்ட ஐவர் அடையாளம் காணப்பட்டனர்



முருகுப்பிள்ளை பூலோகராசா
செட்டை, அலம்பில்,
மணலாறு.



விஜசி இராசதுரை
பன்றிக்கெய்த குளம்,
ஓமந்தை, வவுனியா.



சின்னையா சங்கரப்பிள்ளை
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.



அழகன் சண்முகநாதன்
சேனைத்திடல், நெடுங்கேணி,
முல்லைத்தீவு.



ஆண்டி அருணசலம்
155-ம் கட்டை,
விவேகானந்தா நகர்,
கிளிநொச்சி.

ஸ்ரீலங்கா அரசுமீது எம்மக்கள் கொண்ட நம்பிக்கை அரும்புகள் தகர்ந்து போய் சமாதான மேகமூட்டங்கள் விலகி எமது உரிமைகளுக்காக

நாங்கள் சண்டையிட்டே ஆக வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது எம் தாயகபூமி.

எம் தேசத்தின் விடுதலைக்காக எம் இனிய போராளிக

ளது மக்களது தியாகங்களும் தொடர்கதையாக இருந்துவருகின்றது. விடுதலைப் போராட்டத்தின் போது எம் தாயகம் எதிர்கொள்ளும் சொல்லொ

ணுத் துன்பங்கள் தீர்ந்தபாடில்லை. இத்தனைக்கும்மத்தியிலும் துரோகத்தனங்களும் அற்ப சலுகைக்காக தம் தாயகபூமியை காட்டிக்

கொடுக்கத் துணியும் நயவஞ்சகத் தனங்களும் ஒய்ந்தபாடில்லை. இன்னும் எம்மினத்தின் மத்தியில் துரோகத்தனங்

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வைத்தியம்**

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1464)


# இராணுவ முகாமிலிருந்து இரவு 7 மணியளவில் அவலக் குரல்கள், துவக்கு வேட்டுக்கள் கேட்டன

(மட்டக்களப்பு)

''சத்துருகொண்டானிலுள்ள எனது மாமா, மாமி வீட்டுக்குச் சம்பவ தினம் நானும் எனது மனைவியும் பிள்ளைகளும் சென்றிருந்தோம். அன்று மாலை மாமா வீட்டிற்குப் பிற்பகல் 4 மணியளவில் வந்த இராணுவத்தினர், வீட்டிலிருந்த அனைவரையும் அழைத்துச் சென்றனர்.

நானும் மனைவியும் பிள்ளைகளும் ஒடித்தப்பி ஒளித்திருந்தோம். சத்துருகொண்டான் போய்ஸ் டவுண் முகாம் எமது வீட்டுக்கு அண்மையில் இருக்கிறது, முகாம் பக்கமிருந்து இரவு ஏழு மணியளவில் அவலக்குரல்கள் கேட்டன. துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. பின்னர் அந்த முகாம் பகுதியிலிருந்து பெருந் தீச்சுவாலை தென்பட்டது'' என்று கரையாக்கன்தீவு கணேச வித்தியாலய அதிபர் கந்தையா சிவக்கொழுந்து (வயது 37 என்பவர் வடக்கு, கிழக்கில் காணுமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனதிபதி ஆணைக்குழு முன் அவர் சாட்சியமளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர். ஆணையாளர் திரு. கே. பாலகிட்ணர் தலைமையில் விசாரணை நடைபெற்றது.

## சத்துருக்கொண்டான் வேட்டை பற்றி பாடசாலை அதிபர் சாட்சியம்

திரு. கே. சிவக்கொழுந்து தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது: நான் மட்டக்களப்பில் வாடகை வீட்டில் குடியிருந்தேன் எனது சொந்த வீடு சத்துருகொண்டானிலுள்ளது. அங்கு எனது மாமா, மாமி, பிள்ளைகள் வசித்து வந்தனர். சம்பவ தினத்தன்று நானும் மனைவியும் பிள்ளைகளும் அங்கு சென்றேம். பிற்பகல் நான்கு மணியளவில் சாற்சட்டை போட்ட ஒருவர் சைக்கிளில் கிறிஸ் கத்தியுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினர். ''இங்கிருப்பது ஆபத்து-மட்டக்களப்பிற்கு போய் விடுவோம்'' என்று என் மாமாவிடம் கூறினேன்.

சிறிது நேரத்தின் பின்னர் பெருந் தொகையான இராணுவத்தினர் சிவிலுடையிலும் வந்தனர். சிலர் முகங்களைத் துணிகளால் கட்டியிருந்தனர்.

இவர்கள் கிராமத்தவர்களை முகாமுக்குக் கூட்டிச் சென்றனர். இரவு ஏழு மணியளவில் முகாம் பக்கமிருந்து அவலக்குரல் கேட்டன. சில மணித்தியாலங்களின் பின்

காம் பக்கமிருந்து தீச்சுவாலைகளும் தெரிந்தன அதிகாலை நான் மாமா வீட்டுக்குப் போனேன். அங்கு குழந்தைகளின் செருப்புக்கள் மட்டுமே காணப்பட்டன.

அதன் பின்னர் உடனடியாக நான் பொலிசில் முறைப்பாடு செய்தேன். சத்துருகொண்டான் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி வர்ணகுலசூரியாவுடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிசார் கூறினர். நான் அவரோடு தொடர்பு கொண்டு விடயத்தை எடுத்துக் கூறினேன். தனக்கு எதுவும் தெரியாதென அவர் கூறினர்.

மாமா, மாமி உட்பட ஒன்றரை வயதுக் குழந்தை சுலோசன, மூன்று வயதுக் குழந்தை துளசி ஆகியோர் உட்பட எமது குடும்பத்தில் பத்துப் பேரைக் காணவில்லை. பின்னர் அந்த முகாமுக்கு அண்மையில் மண்டையோடுகள் இருப்பதாக அப்பகுதிக்கு மாடு மேய்க்கச் சென்று வந்தவர்கள் கூறினர்கள். -சி

# கடும்மோதலில் சிக்கிய வயோதிபருக்கு கத்திவெட்டு

(நெல்லியடி)

இரு சாராருக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் வயோதிபர் ஒருவர் கத்தி வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சண்டையில் ஈடுபட்ட சுமார் பதினெரு பேரை கோப்பாய் காவல்துறையினர் கைதுசெய்தனர்.

புத்தூர்ப்பகுதியில் அண்மையில் இச் சண்டை இரு சாராருக்கிடையில் மூண்டது. ஸ்தலத்திற்குச் சென்ற கோப்பாய் காவல்துறையினர் சண்டையில் ஈடுபட்டோரை கைது செய்ததுடன், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் 11 பேரை கைது செய்தனர், 160-சி

# 1950மெ.தொன்மாவுடன் ஹபரண வந்தது

(நெல்லியடி)

திருமலையிலிருந்து 1950 மெ தொன் மா ஏற்றிய ஹபரண கப்பல் நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

மழை பெய்துகொண்டிருந்தமையால் கப்பலிலிருந்து மா இறக்கும் பணி சில மணி நேரம் தடைப்பட்டது.

தற்போதுள்ள சீரற்ற கால நிலையால் அடுத்த கிழமைக்குள் வேறு உணவுக் கப்பல்கள் பருத்தித்துறைக்கு வரமாட்டாதெனவும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன. 160-சி

# ஓய்வூதிய நிலுவைப் பணம் சேர்த்து வழங்கப்படும்

[மானிப்பாய்]

யாழ், மாவட்ட ஓய்வூதியர்களின் இம் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும காசோலைகளும் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து உரியவாகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள.ன

ஓய்வூதியர்களுக்கு இம் மாத ஓய்வூதியத்துடன் கடந்த 1-7-92 தொடக்கம் 31-12-92 வரையுள்ள நிலுவைப் பணம் 1560 ரூபாயும் சேர்த்து வழங்கப்படும்.

மேலும் யாழ், மாவட்டத்தில் றெயில்வே திணைக்கள ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் மே மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் கடந்த 7ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது, 71

## கௌரவிப்பு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த உற்சவ நாட்களில் விநாயக புராணம் என்னும் பொருளில் தொடர் விரிவுரை நிகழ்த்திய சிவநெறித் தொண்டர் சி சத்திய மூர்த்திக்கு அண்மையில் பாராட்டு விழா நடைபெற்றது.

வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு நல்லை ஆதீன முதலவர் சோமசுந்தர பரமாச்சாரியார் சத்திய மூர்த்திக்கு பொன்னடை போர்த்தி கௌரவித்தார். 71


## மகளிருக்கான 6 மாத கால டிப்ளோமா மனைப்பொருளியலும்கைத்திறனும் பயிற்சிகள்

★ கேக் ஐசிங் ★ கைவேலை
★ உடை தயாரித்தல் ★ பூவேலை
★ உணவு தயாரித்தல்

★ மேற்படி டிப்ளோமா பயிற்சி பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம, கோலம் வகுப்புகள் நடைபெறும்.

★ பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

★ புதிய கிழமை நாள் பிரிவுகள்
ஆரம்பம்: 10.05.95

★ புதிய சனி ஞாயிறு பிரிவுகள்
ஆரம்பம்; 14.05.95

**கலாலயா**

(தொழிற்பயிற்சியகம்)
விக்ரோறியா வீதி,
(மருத்துவமனையின் பின் வீதி)
யாழ்ப்பாணம்.

(ஏ 4918)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05–09**

செவ்வாய் இரவு

08-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்துகொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்
08-20 நலந்தானு- புகைப் பிடிப்பதன் கேடுகள் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய 'வித்தியா சங்கள்''
08-50 மலரும் மொட்டுக்கள்

**1995–05–10**

புதன் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05–09**

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05 10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானொலி மதியூகம்-19
600 சிந்தனைக்குச் சில விடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

அணு ஆயுதக் கருவியை

# ஈரானுக்கு விற்க ரஷ்ய அரசு முடிவு

(மொஸ்கோ)

அணுஆயுதம் இயங்குவதற்கு தேவையான யுரேனியம் தயாரிக்க கூடிய கருவிகளை ஈரானுக்கு விற்பனை செய்வதற்கு ரஷ்ய ஒப்புக் கொண்டுள்ளதாக ரஷ்ய அதிபர் பொரிஸ் ஜெல்ஸின் சார்பில் கருத்து வெளியிடும் அதிகாரி ஒருவர் உறுதி செய்துள்ளார்.

எனினும் பன்னுட்டு அணு சக்தி இயக்கத்தின் கோட்பாட்டு விதிமுறைகளுக்கு இம்முறையானது அடங்கவில்லை யெனருல் இவ் ஆயுத மைய எதிர்ப்புக் கருவி விறபனையை ஜெல்ஸின் அங்கீகரிக்க மாட்டார் என்றும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை ஈரான் இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தக்கூடும் என்பதனுல் ரஷ்யாவின் இவ்விற்பனையை அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் வெகுவாக கண்டித்துள்ளார். க-சி

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு மலத்தியோன் வந்தது

(நெல்லியடி)

மந்திகை அரசினர் மருத்துவ மனைக்கு போதியளவு மலத்தீன் மருந்து அண்மையில் வந்துசேர்ந்துள்ளது.

ஏற்கனவே மலத்தினுக்கு தட்டுப்பாடு இருந்தமையால் சில பகுதிகளுக்கு இதனை விசிறுவது தடைப்பட்டிருந்தது எனினும் 1995ம் ஆண்டுக்கான இரண்டாம்கட்ட விசிறல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மலேரியா நோய் அதிகரித்துள்ள வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் செம்பியன்பற்று, வடமராட்சி வடக்கு. கற்கோவளம் பகுதிகளிலே மலத்தின் விசிறல் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதேவேளை மந்திகை மருத்துவமனையிலுள்ள ஜெனறேற்ரரிலிருந்து வாட்பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்க மின் சார வயறிங் வேலைகள்யாவும் பூர்த்தியடைந்துள்ளது.

ஜெனரேற்றர் வந்து ஒரு வருட காலமாகியும்இதுவரை இதற்கான டீசல் வந்து சேரவில்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. 160-சி

# சகல பகுதிகளிலும் வீதி விளக்குகள் ஏற்றப்பட வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

யாழ், மாநகராட்சி மன்றத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி விளக்குகள் இரவு நேரத்தில் சில பகுதிகளில் ஏற்றப்படாமல் இருப்பதைக்காணக்கூடியதாக உள்ளது.

வீதி விளக்குத் திட்டம் அமுல்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து யாழ். நகரில் இரவு நேரங்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கு இது

(5ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்.

### மணிவாக்கு

அசுர பலம் உடைமை நல்லதுதான், ஆனால் அதை அசுரனைப்போல் உபயோகிப்பது கொடியது.

— ஷேக்ஸ்பியர்.

## நமது நோக்கு

### வர்த்தகத்தடை

ஈரானுக்கு எதிராக வர்த்தகத் தடையை அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதற்காகக் கூறப்படும் காரணங்கள் என்ன?

ஒன்று- பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்யும் பத்து முதல்தர நாடுகளில் ஈரான் முதலிடம் வகிக்கிறது.

இரண்டு- அழிவுக்கான அணு ஆயுத முயற்சியில தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது.

மூன்று- இஸ்ரேலுடன் ஏனைய மத்திய கிழக்கு நாடுகள் செய்யும் சமாதான முயற்சிக்கு இருள் சூழும் நிலையை ஏற்படுத்துகின்றது.

கூறப்படும் காரணங்களின் அடிப்படையில் ஏனைய சில நாடுகளின் செயற்பாடுகளையும் அமெரிக்கா ஆராயுமா? அந்த நாடுகளின் மீதும் வர்த்தகத் தடைகளை விதிக்குமா?

ஏனெனில்- இலங்கை போன்ற சில நாடுகளில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர இடையூறாக இருக்கும் நாடுகள் எவை?

மனித உரிமை மீறல்களுக்கு மறைமுக ஆதரவு தந்து அரச பயங்கரவாதத்தை வளர்க்கும் நாடுகளுக்கு வர்த்தகத் தடை விதிப்பது பற்றியும் சிந்திப்பது உலக அமைதிக்கு வழிவகுக்கும்.

நேற்றைய நண்பன் இன்றைய எதிரி என்பது சர்வதேச அரசியல் விவகாரங்களில் சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்- பரம்பரை மன்னனான ஷாவின் ஆட்சியில் ஈரான் இருந்தபோது நிதி, இராணுவ உதவிகளைத் தாராளமாக வழங்கியது அமெரிக்காதான்.

கொமெய்னியின் தலைமையில் நடந்த இஸ்லாமியப் புரட்சியால், ஷா மன்னன் நாட்டை விட்டு விலகியபின் அமெரிக்க உதவிகள் நின்றுவிட்டன.

இன்று- வர்த்தகத் தடைகள் போட்டுப் பகை நாடாகக் கருதுகிறது.

இந்த வர்த்தகத் தடையைச் சில ஐரோப்பிய நாடுகள் ஏற்காது கண்டிப்பதும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில்- எதிர்பார்த்ததற்கு மேலாக நிதி உதவி கிடைத்துவிட்டதே எனப் பெருமையோடு பேசப்படுகிறது.

பிறநாட்டு நிதி உதவியும், இராணுவ ஆதரவும் நிரந்தரமானதல்ல என்பதை ஈரானின் அனுபவம் நிரூபித்துவிட்டது.

இதனை மனதிற்கொண்டு நிரந்தர அமைதிக்கான வழியைக் காண்பதே நல்லது!

# சரணடைவதா? சண்டையிடுவதா?
# 35,000 படையினர் பொறியில் சிக்கினர்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள 35,000 படையினரையும் மீட்பதற்காக புலிகளின் முற்றுகை முறியடிக்கப்படாவிட்டால் அவர்கள் அனைவரும் புலிகளிடம் சரணடைய வேண்டிய நிலை அல்லது கொல்லப்பட வேண்டிய நிலை ஏற்படுவதை மறுக்கமுடியாதென கொழும்பில் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முகாம்களை சுற்றி முற்றுகையிட முயன்ற படையினர் தற்போது தங்கள் முகாம்களில் சிக்கிப் போயுள்ளனர். இந்தத் தருணத்தில் விமானங்களை இயக்குவது சாத்தியமற்றதொரு செயல் எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். குடாவில் உள்ள அனைத்து படைமுகாம்களிலுமுள்ள படையினர் தற்போது என்னசெய்வதென்ற நிலை தெரியாது உள்ளனர். இவர்களது நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது சரணடைவதா அல்லது சண்டையிட்டு மடிவதா என்றமுடிவை முகாம்களிலுள்ளபடையினரே எடுக்கவேண்டிய நிலையிலுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலதிக துருப்புக்களை எப்படி யாழ், குடாவிற்கு அனுப்புவது என்று எதுவும் தெரியாத நிலையில் கொழும்பில் படை அதிகாரிகள் திகைத்துப் போயுள்ளனராம் மேலதிக துருப்புக்களும் உணவுப் பொருட்களும் யாழ் குடா முகாம்களுக்கு அனுப்பப்பட்டாலன்றி இங்கு சிக்கிப் போயுள்ள படையினரை எவ்வகையிலும் காப்பாற்றமுடியாத நிலை ஏற்படும்.

அடுத்து என்ன செய்வது என்பது குறித்து தீவிரமாக ஆராய்ந்துவரும் அரசுவடபகுதியில் மேலதிக துருப்புக்களையும், உணவுப்பொருட்களையும் அனுப்புவதற்கு வெளிநாட்டு உதவிகளைபெற ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -சி

# கடற்புலிகளாலும் ஆபத்து
# கப்பல் நடமாட்டம் குறைவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கடற்புலிகளிற்கு அஞ்சிகடற்படைக் கப்பல்களின் நடமாட்டமும் வடபகுதிக் கடலில் வெகுவாக குறைந்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து விமானங்கள் வடக்கு-கிழக்கில் பறப்பது முற்றாக நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் கடற்படைக்கப்பல்களின் நடமாட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளிடம் விமானம் சுடும் ஏவுகணைகள் இருப்பது போல் கடற்படை பீரங்கிப் கப்பல்களை தகர்க்கக்கூடிய நவீன ஆயுதங்கள் இருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது இதனால் கடற்படை கப்பல்களின் நடமாட்டமும் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு-கிழக்கில் தோன்றியுள்ள நிலைமை கடந்த 12வருடகாலப் போரில் இலங்கைப்படைகள் சந்திக்கவில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்துள்ளது.

கிழக்கில் படையினர் சிறு சிறு சுற்றி வளைப்புகளை மாத்திரம் தற்போது மேற்கொள்வதாகவும் அதுவும் முடக்கப்படும் சாத்தியம் விரைவில் ஏற்பட்டு விடுமெனவும் அஞ்சப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -சி

### நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையின் மலசல கூடம் திருத்தம் செய்வதற்கு எட்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 51

### மாதாந்த உதவிப் பணம்

(ஆனைப்பந்தி)

வேலணை பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்குரிய பங்குனி மாதக் கொடுப்பனவு மற்றும் தொழு நோய், புற்று நோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான உதவித் தொகை யாழ், பிரதம தபாலகத்தில் இயங்கும் வேலணை, புங்குடுதீவு பிரிவு தபாலகங்களில் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. 101

# பல வெளிநாடுகளின் கவனம்
# இலங்கை பக்கம் திரும்புகிறது

(கொழும்பு)

இலங்கையில்தோன்றியுள்ள புதிய நிலைமை காரணமாக பல வெளிநாடுகளினது கவனம் இலங்கை பக்கம் திரும்பியுள்ளது. வெளிநாட்டுச் செய்திகள் தினமும் இலங்கைச் செய்திக்கு முக்கியமளித்து வருகின்றன.

விடுதலைப் புலிகள் அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்தியதை தொடர்ந்து புலிகளுக்கு எங்கிருந்து இந்த ஏவுகணைகள் கிடைத்தன என்று இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா உட்பட பல நாடுகளும் தமது புலனாய்வு துறையினர் மூலம் தகவல்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை தனது நாட்டுக்கும் புலிகளின் ஏவுகணையால் பெரும் ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தில் இந்த ஏவுகணைகள் குறித்து இந்தியா சில வெளிநாடுகளுடன்தொடர்பு கொண்டுள்ளதாக பி, பி, ஸி தெரிவித்தது. இலங்கையும் இதேபோன்ற விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஆசியாவிலேயே கெரில்லாக்கள் வரிசையில் முதல் முறையாக ஆப்கானிஸ்தானில் முஜாகுதீன் போராளிகளிடமும் தற்போது இரண்டாவதாக விடுதலைப்புலிகளிடமும் ஏவுகணைகள் கிடைத்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் சுட்டிக்காட்டியுமுள்ளன. சி

### பலதும் பத்தும்

#### மூன்றும் இணைந்து...!

இந்திய மருத்துவம் என்ற பெயரில் சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று வகை மருத்துவமும் இணைந்து செயல்படுகிறது சென்னையிலுள்ள 'இம்கொப்ஸ்' (Imcops) நிறுவனத்தில்.

தரமான இந்திய மருந்துகள் தயாரிக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் 50 வருடங்களுக்கு முன் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் இன்று பல கிளைகளோடு செயற்படுகின்றது. 7000 சித்த மருத்துவர்கள், 4000 ஆயுர்வேத மருத்துவர்கள், 1000 யுனானி மருத்துவர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய திராவிட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சிதான். நவீன கருவிகள், தரக் கட்டுப்பாட்டிற்கான சோதனைகளோடு குளிகைகள், சூரணம், கஷாயம், இலேகியங்கள் தயாரிக்கப்படுகின்றன. 800க்கு மேற்பட்ட மூலிகைகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றனவாம்!

— மயூரன்

### பயிலுனர் ஆசிரியர்க்கு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தொலைக் கல்வி நிலைய பயிலுநர் ஆசிரிய மாணவர்கள் யாவரையும் நாளை புதன்கிழமை நிலையத்திற்கு சமூகம் தரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

போதனை வகுப்புகளும் மாதிரி முன்னோடிப் பரீட்சைகளும் நாடகமும் அரங்கும் என்ற வகுப்புகள் முற்பகல் வேளை நடைபெறும். ஏனைய நிலைய மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# யாழ். குடாவை முற்றுகையிட
# பூநகரி முகாம் தேவையாம்

(கொழும்பு)

பூநகரி முகாமானது யாழ்ப்பாண குடாநாட்டின் மீதான இராணுவ முற்றுகைக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவே இராணுவம் கருதுகின்றது.

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் இராணுவம் யாழ்ப்பாணம் மீதான தனது பாரிய இராணுவ தாக்குதல் திட்டத்திற்கு வாய்ப்பானதும், வளமானதுமானதொரு தளமாகவே பூநகரி முகாம், இராணுவ அதிகாரிகளால் கருதப்படுகிறது.

பெருமளவு உயிரிழப்புக்களையும் உடைமைகளையும் தியாகம் செய்தே பூநகரி முகாம் அமைக்கப்பட்டது. பின்னர் ஒரு தடவை புலிகளின் தீவிர முற்றுகைக்குட்பட்டதால் பெருமளவு இராணுவத்தினரின் உயிர்த்தியாகத்தினால் தக்க வைத்திருப்பதும் இலகுவாக இம்முகாம் கைவிடப்படாது என்பதற்கான சான்றுகளாகும்.

இதேவேளை அரசிலும் இராணுவத்திலுமுள்ள கடும்போக்காளர்களும் இந்த முகாம் அகற்றப்படுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள் என்பதும்குறிப்பிடத்தக்க விடயமாகும். சி

# வைத்தியர்கள் வேலை நிறுத்தம்;
# காயமடைந்த படையினர் பாதிப்பு

(கொழும்பு)

துணை மருத்துவ சேவையிலுள்ள தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு வருவதால் வடக்கு-கிழக்கில் யுத்த முனைகளில் பாதிக்கப்படும் படையினர் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல கோரிக்கைகளை முன்வைத்து வைத்திய தொழிற்சங்கங்கள் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் வடக்கு - கிழக்கில் யுத்த முனையில் படுகாயமடையும் படையினருக்கு மருத்துவ வசதி கிடைக்காமல் போவதாக படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற பல்வேறு மோதல்களில் 30க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போதிலும் வைத்திய சிகிச்சைகள் போதிய அளவில் கிடைக்காமல் போகின்றன. குறைந்த

(4ம் பக்கம் பார்க்க)

# அந்நிய இராணுவ உதவியும் இறைமை பறிபோதலும்

விடுதலைப் புலிகளின் போர் உபாயங்களுக்கு தாக்குப்பிடிக்கமுடியாத சிறிலங்கா அரசு அந்நிய நாடுகளிடமிருந்து குறிப்பாக இந்தியாவிடமிருந்து இராணுவ உதவிகளை நாடியுள்ளதாக பேச்சுக்கள் அடிபடுகின்றன. சிங்கள ஆட்சியாளர்களின் வரலாற்றில் உள்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அந்நிய நாடுகளின் உதவியை கோருவது வழக்கம். அவ்விதமே உதவிகளைப் பெறும் வேளைகளில் தம் இறைமையை இழப்பதும் அல்லது பாரதூரமான பாதகமான பின் விளைவுகளுக்கு உள்ளாவதும் சரித்திரம் கண்ட உண்மை.

வரலாறு என்னும் போது இனஒழிப்பு நோககுடன் கபடத்தனமாக சரித்திரத்தைத் திரிபுபடுத்தி எழுதப்பட்ட பொய்யான மகாவம்சத்தில், உள்ளவற்றைக் கூறவில்லை. நவீன வரலாற்றை எடுத்துப் பார்ப்போமானல் இந்த உண்மை விளங்கும்.

## கோட்டை இராச்சியம்

கோட்டை இராச்சியத்துக்குப் புவனேகபாகுவும், அவனது சகோதரர்களான மாயாதுன்னேயும் றைகம்பண்டாராவும் உரிமைகோரினர். மூத்தவன் புவனேகபாகு தனது சகோதரர்களுக்கு எதிராக போத்துக்கேயர்களிடம் உதவி கோரினுன். அதன் பலன் என்ன? இதன் விளைவாய் தனது மகனை சத்தோலிக்க சமயத்தவனுக மாற்றியதும். அவனுக்கு டொன் யுவான் தர்மபாலா என்ற பெயரை வைப்பதிலும் ஈற்றில் கோட்டை இராச்சியத்தையே போத்துக்கேயர்களிடம் கோட்டை விட்டதிலும் முடிந்தது. இந்நிகழ்வுதான் மேலத்தேய அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் முதலில் இலங்கையில் காலடி வைக்க வழிகோலியது.

## கண்டி இராச்சியம்

செங்குத்தான மலைகளாலும், ஆறுகளாலும் இயற்கையாகவே பாதுகாப்பு வாய்ந்த கண்டி இராச்சியத்தின் கதையை எடுத்துநோக்குவோமேயானல் அங்கு ஆட்சிபுரிந்த தமிழ் மன்னனுன சிறிவிக்கிரமராஜசிங்கனே அரியாசனத்திலிருந்துஅகற்றுவதற்காக அவன் கீழ் பதவி வகித்த மந்திரி பிரதானிகள் ஆங்கில வல்லரசின் இராணுவ உதவியைநாடினுர்கள். இந் நடவடிக்கையால் ஏற்பட்ட விளைவு எல்லோரும் அறிந்ததே. சிங்கள ஆட்சியாளர்களின் இக்காட்டிக்கொடுப்பு இலங்கை முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வருவதற்கு வழி வகுத்தது. கண்டிய மக்கள்தங்கள் இறைமையை இழந்தார்கள். ஆங்கிலேயர்களின் கீழ் கண்டிய மக்கள் பாழ் நிலவரி, தானியவரி போன்ற சட்டங்கள் மூலம் தம்நிலங்களை ஆங்கிலப் பெருந்தோட்ட முதலாளிக்கு தாரைவார்த்துக் கொடுக்க வேண்டியவர்களானுர்கள்.

## பாரிய இந்தியா

இந்திய சுதந்திரபோராட்ட காலத்தில் புத்திஜீவிகளான பண்டிதர் நேரு, வைத்தியா, கே. எம். பணிக்கார் போன்றவர்கள் இலங்கையை இந்தியாவின் ஓர் அங்கமாக்குவதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்தலாம் என்ற கருத்தைக்கொண்டிருந்தார்கள். இக்கால கட்டத்தில் இலங்கையில் சிங்கள வலது சாரி புத்திஜீவிகள் மத்தியில் எதிர்காலத்தில் சிறியநாடுகள் தனித்தியங்க முடியாதென்ற கருத்தும் நிலவியது. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போன்ற இடதுசாரி நோக்குக்

**ச. தியாகராசா**

கொண்டவர்களும் பல நாடுகள் தழுவிய கூட்டமைப்பை தம் கோட்பாடாகக் கொண்டிருந்தனர். கொல்வின் ஆர். டி. சில்வாவின் கட்சியின் பெயரிலிருந்தே இதைக் கண்டு கொள்ளலாம். அதன் பெயர் இந்தியா- இலங்கை - பர்மா போல்ஸ்விக் லெனினிஸ்ற் கட்சியாகும்.

## ஜே. ஆர்—நேரு

இத்தறுவாயில் இலங்கையை இந்தியாவுடன் சேர்க்கவேண்டுமென்ற கருத்தைக்கொண்டிருந்த தன்னைப் புத்திஜீவியெனக் காட்டிக்கொள்ள விரும்பிய ஜே. ஆர். ஜயவர்த்தன இலங்கை தேசிய காங்கிரசின் சார்பில் ஜவகர்லால்நேருவுக்கு ஒரு கடிதத்தை எழுதினுர்: அதில் "நாங்கள் சுதந்திர இலங்கையும், சுதந்திர இந்தியாவும் ஒரு சமஷ்டி அமைப்பில் அல்லது இறுக்கமான கூட்டமைப்பில் ஒன்றிணைவதை விரும்புகிறேம்'' என்று எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு ஜே ஆர். நடந்து கொண்டதற்கு அக்காலத்தில் இடதுசாரிகளுக்கு இருந்த செல்வாக்கும் ஒரு காரணமாகும், அவர்களைவிடத் தான் ஒருபடிமேல் என்பதைக் காட்டுவதற்கும் இவ்வாறு செய்திருப்பார். எங்கே சந்தர்ப்பம் கிட்டும் என்றிருந்த நேரு தனது 7-8-40 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் உங்கள் கருத்தை நாங்களும் வரவேற்கிறேம். மேலும் இது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உங்கள் பேராளர்களின் வருகையை ஆவலுடன்எதிர்பார்க்கிறேம் என்று பதில் அளித்திருந்தார். நேருவினதும் ஜே. ஆரினதும் விருப்பம் நிறைவேறியிருந்தால் இலங்கைக்கு எத்தகைய பாதகமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே முடியாது. இலங்கையின் நல்ல காலத்துக்கு இந்தியாவில் மவுண்பேற்றனும் இலங்கையில் சோல்பரி பிரபு, சேர் ஐவர் ஜெனிங்ஸ் போன்றேரும் முறையே பாகிஸ்தானை உருவாக்கி இந்தியாவை பலவீனப்படுத்தியதாலும் இலங்கையில் இந்திய எதிர்ப்புணர்வுகளை உருவாக்குவதிலும் வெற்றிகண்டநால் இலஙகை இந்திய உயர்குளாத்தினரின் ஆட்சிக்குள் அகப்படாது தப்பியது.

## சமாதானப் படை

அடுத்த கட்டம் சமாதானப் போர்வையில் இலங்கைக்குள் இந்திய ஆக்கிரமிப்புப் படை ஜே. ஆரினுல் வரவழைக்கப்பட்டமையாகும். இந்திய ஆக்கிரமிப்புப்படையினர் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாதத்தால் ஏறத்தாள பத்தாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனரேயாயினும் அவர்களின் வருகைக்கு எதிராக தென்னிலங்கையில் எழுந்த புரட்சி ஏறத்தாள அறுபதினுயிரம் சிங்கள இளைஞர்களை பலிகொண்டதோடு அரசாங்கத்தை வீழ்ச்சியடையக் கூடிய நிலையை ஜே. வி. பி யினருக்கு ஆக்கிக் கொடுத்தது.

இந்நிலையில்தான் திருமதி சந்திரிகாவும் தங்களைப் புத்திஜீவிகள் என்று கூறிக் கொள்பவர்களும், சிங்களப் பத்திரிகையாளர்களும் இந்திய இராணுவத்தை விடுதலைப் புலிகள் அமைப்பை ஒழித்துக்கட்டுவதற்கு உதவி செய்யுங்கள் என்று கோருகிருர்கள். அவர்கள் வருவார்களோ இல்லையோ எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கவோ தோற்கடிக்கவோ முடியாது என்பதை வரலாறு எல்லோருக்கும் கூறத்தான்போகிறது. ஆனல் அந்நிய உதவி கோரலும், அந்நியப் படைவருகையும் சிறிலங்காவில் எதிர்பாராத பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென்பது திண்ணம். (சி)

# ஏவுகணையுடன் களத்தில் விடுதலைப் புலிகள்

# யுத்தநிலை மும்முரமடையும் சூழ்நிலை

(கொழும்பு)

இலங்கை யுத்த களத்திற்கு அறிமுகம் இல்லாத புதிய ஆயுதம் ஒன்று புழக்கத்திற்கு வந்துள்ளது. இதனுல் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் மும்முரமடையும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது,

அப்பத்திரிகை மேலும்தெரிவிக்கையில்; இலங்கை வரலாற்றில் இரண்டு விமானங்கள் ஏவுகணைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இலங்கையில் ஏவுகணை பாவிக்கப்பட்டதும் இங்கே கொண்டு வரப்பட்டதும் இதுவே முதல் தடவையாகும்.

கடந்த 28ம் திகதி மாலையும், 29-ம் திகதி காலையும் அடுத்தடுதது இரு அவ்ரோ விமானங்கள் விடுதலைப் புலிகளின் ஏவுகணைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதையடுத்தே புலிகளிடம் ஏவுகணை இருக்கும் விடயம் அரசுக்குத் தெரியவந்தது.

உலகின் பல கெரில்லா இயக்கங்கள் உள்ளன. ஆனுல்குறிப்பாக ஆப்கானிஸ்தான் கொால்லாக்களிடம் மாத்திரமே அதிகளவு ஏவுகணைகள் உள்ளன. இப்போது புலிகளும் ஏவுகணைகளை உபயோகிககத் தொடங்கிவிட்டனர். விடுதலைப் புலிகளிடம் ஏவுகணை இருப்பது விமானப்படையினர் வடக்கு, கிழக்கு வான்பரப்பில் விமானங்கள்பறப்பது பெரும்இடையூறை ஏற்படுத்தியுள்ளது,

வடக்கில் மட்டும் சுமார் 35,000க்கும் மேற்பட்டபடையினர் இருக்கின்றனர் பலாலி காறைநகர், காங்கேசன்துறை, ஆனையிறவு. பூநகரி, ஆகிய பிரதான முகாமகள் உட்பட பல 'இரண்டாவதுதர' இராணுவ முகாம்களும் உள்ளன. இவை தவிர மன்னுரிலும் பல முகாம்கள் உள்ளன.

இந்த முகாம்களுக்கு தினமும் காலையில் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து சீனத் தயாரிப்பான வை-8 வை-12 ரக சரக்கு விமானங்கள் மூலம் சகல உணவுப் பொருள்களும் எடுத்துச்செல்லப்படுகின்றன. விமானங்கள் அங்கு செல்வதற்கு இனிமேல் இடையூறு ஏறபடுமாயின் அங்குளள படையினருக்கு பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம.

விடுதலைப்புலிகள் விமானங்களை 'கலிபர் 50' ரக பீரங்கிகளை கொண்டே தாக்கிவந்தனர் இதனுல் விமானங்கள் சுமார் 10,000 அடிக்கு மேல் வான்பரப்பில் பறந்தன கலிபர் 50' ரக விமான எதிர்ப்பு பீரங்கியினுல் சுமார் 6000 அடி வரையே சுடமுடியும் இதனுல் தற்போது புலிகள் 'ஸ்ரிங்கர்' என அழைக்கப்படும் ஏவுகணை எப்படியோ வாங்கிவிட்டதாக கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள்கடற்படை தரைப்படை, பொலிஸ்படை, ஆகியவற்றை அமைத்து செயற்பட்டு வந்தனர் விமானப் படை மாத்திரமே அவர்களிடம் இல்லாதிருந்தது இப்போது 'தமிழீழ வான்படை' என்ற பெயரில் விமானப்படையையும் நிறுவிவிட்டனர். இந்த நிலையில் மீண்டும் அரைகுறை சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் வருவார்களா என்ற கேள்வியும் ஒரு சாராரால் எழுப்பப்படுகிறது.

கடத்த மோதல் தவிர்ப்பு காலத்தில் பூநகரி படைமுகாமை அகற்றிவிடுமாறு எத்தனையோ முறை புலிகள் அரசை வற்புறுத்தினர் ஆனல் இராணுவ நலனை காரணம் காட்டி அதனை அகற்ருமல் அரசு தன்னிச்சையாகவே அப்பாதையை போக்குவரத்திற்காக திறந்துவிட்டது. இது புலிகளை உதாசீனப்படுத்தி விட்டதாக அவர்கள் நினைத்தனர்.

இந்தப் பாதையில்முகாமை அகற்றி இருந்தால் இன்றைய விருப்பத்தகாத நிலையை அரசு எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என அரசிரல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். -சி

# நரசிம்மராவின் தலைமைக்கு ஆபத்து கட்சியில் எதிர்ப்பு வலுக்கிறது

(புதுடில்லி)

இந்திய தலைநகர் புதுடில்லியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற நான்கு மணிநேர கூட்டம் ஆளும்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பிரதமருமான திரு. நரசிம்மராவிற்கு எதிராக கட்சியில் அதிருப்தி அதிகரித்து வருவதை உறுதி செய்யும் விதத்தில் அமைந்திருந்ததாக தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியில் புதிய தலைவர் என ஒருவரைத் தனியாக நியமனம செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை யாரும் விரும்பவில்லை எனக் கட்சியின் அறிவிப்பாளர் திரு. காட்கில் மறுத்தாலும் கட்சியின் செயல்தலைவர் ஒருவரை நியமனம் செய்யும் தருணம் வந்துவிட்டதாக பலரும் கூறியுள்ளனர்.

இக்கருத்தை கேரள முன்னுள் முதல்வர் கருணுகரன், மஹாராஷ்ரா முன்னுள் முதல்வர் திரு. சரத்பவார் மற்றும் மத்திய அமைச்சர் ராஜேஸ் பைலட்டும் இக்கருத்தை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை இம்மூவரும் பிரதமர் நரசிம்மராவைஆதரித்து வந்தவர்கள். தற்போது இவர்களும் இவ்வாறு கருத்து கூறி இருப்பதால் திரு. ராவ் தனித்துவிடப்படும் அபாயம் எழுந்துள்ளது.

கட்சியில் எத்தகைய தேவை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை முடிவுசெய்யும்நபர் நான்தான் என இக்கூட்டத்தின்போது பிரதமர் ராவ் குறிப்பிட்டதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது. (சி)

# பாரிய பொருளாதார நெருக்கடியில் இலங்கை திணறும் நிலையில்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு பெருமளவில் பின்தள்ளப்படும் அபாயம் தோன்றியுள்ளதாக பொருளாதாரநிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கைத்தொழில், ஏற்றுமதிகளில் காணப்படும் தொடர் தேக்கநிலையே இந்த அபாய நிலைக்கு வழிகோலியுள்ளதாக இலங்கையிலுள்ள பல பொருளாதார ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

கடந்த ஆண்டு அதற்கு முந்திய ஆண்டைவிட 1/3 வீதத்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சிகண்டுள்ளது. பொருளாதார நிலைமையில் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் மற்றும தேர்தல் சூழ்நிலைகள் இந்நிலைமைக்கு முக்கிய காரணமாய்அமைந்ததாகசுட்டிகாட்டப்பட்டுள்ளது

இவ்வாண்டு அரசு தனது முதலீட்டு மையங்களுக்கான ஒதுச்கீட்டு தொகையை அதிகரிக்காத பட்சத்தில் நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர கொழும்பு பங்கு விலைச் சுட்டியின் அதிகரிப்புமுன்னைய ஆண்டைவிட கடந்த ஆண்டில் 3 3 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

தற்போது மீண்டும் யுத்தம் வெடித்துள்ளதால் நாட்டின் பொருளாதார நிலை மேலும் மோசமடையுமென தெரிவிக்கப்படுகிறது. -சி

## வைத்தியர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளவு டாக்டர்களே இச்சேவையில் ஈடுபட்டுள்ளனராம்.

இதேவேளை வைத்தியர்களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தால் நாட்டில் பெருமளவு நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல நோயாளர்கள் சிகிச்சை இன்றி மரணம டைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை கடமைக்கு திரும்புவதில்லை என டாக்டர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். சி

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.



# லண்டனில் 2ம் உலகபோரின் முடிவை குறிக்கும் நிகழ்ச்சி

(லண்டன்)

இரண்டாம் உலகப் போரின் முடிவைச் குறிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் லண்டன் ஹைட்பார்க்கில் நேற்று முதல் நடைபெற்று வருகின்றன.

எலிசபெத் மகாராணியார் மற்றும் 50 நாடுகளின் பிரதிநிதிகள் சமாதானம் மற்றும் நன்றி தெரிவிக்கும் முகமாக இக் கூட்டங்களில் பங்குபற்றி வருகின்றனர்.

லண்டனில் ஆரம்பமாகிய சமாதான முன் முயற்சிகள் பாரிஸ், பேர்லின், மொஸ்கோ போன்ற இடங்களிலும் நடைபெறுவதாக தெரிவிக்கப் படுகிறது. -க

# நோயாளருக்கு நலன்புரிச் சங்கம் செய்துவரும் சேவை

[யாழ்ப்பாணம்]

நோயாளர் நலன்புரிச் சங்கம் நோயாளர் இல்லங்களான மருத்துவமனைகளைத் தனது பணிக்களங்களாகச் செயற்பாட்டு மையங்களாகக் கொண்டு நோயாளர்களுக்கு வேண்டிய சகல விதமான சேவைகளையும் விரிவு படுத்தி வருகிறது என நோயாளர் நலன் புரிச்சங்கம் வெளியிட்டுள்ள வெளியீடு ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ் வெளியீட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மருத்துவ மனைகளிலிருந்து சிகிச்சை பெற்று வெளியேறும் வசதியற்ற வறிய நோயாளர்களை இச் சங்கத்தின் மிதிவண்டிகள் மூலமாகவோ அல்லது வேறு வாகனங்களைப் பயன்படுத்தியோ அவர்களின் சொந்த இடங்களுக்கு இலவசமாக அனுப்பிவைப்பதுடன் தேவைப்படும் பட்சத்தில் கைச் செலவுக்கு பணமும் வழங்கப் பட்டு வருகிறது.

மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரு வசதி குறைந்த வறிய நோயாளி மரணத்தைத் தழுவிக் கொண்டால் அவர்களுக்கு தேவையான ஒழுங்குகள் செய்வதுடன் பூதவுடல் வைக்கும் பேழை பூதவுடலை அவர்களின் இடங்களுக்குக்கொண்டு செல்வதற்கான வாகன ஒழுங்குகளும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் வசதியற்ற நோயாளர்களுக்கு அவர்களின் பராமரிப்பும் அருகிலிருந்து கவனிக்கும் சேவை போன்றவைகள் இலவசமாக வழங்கப் பட்டு வருகிறது.

ஆதரவற்ற வறிய நோயாயர்களுக்கு குருதிக்கொடை தேவைப்படுமிடத்து குருதிக் கொடையாளிகள் மூலம வழங்கி வருவதோடு மருத்துவ மனையில் இருக்கும் குருதி வைப்பகத்துக்கும் காலத்துக்கு காலம் குருதிக்கொடையாளர்கள் மூலம் வழங்கி வருகிறது 162

## சகல பகுதிகளிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் உதவியாக இருந்து வருகிறது. இதனல் யாழ். நகரில் இரவுநேர வீதி விபத்துக்களும் ஓரளவு தவிர்க்கப்பட்டு வருகிறது.

சகல பகுதிகளிலும் இவ்வீதி விளக்குகள் தவருது பற்ற வைக்கப்படவேண்டுமென்றும் இதனல் பொதுமக்களுக்குப் பெரிதும் நன்மைபயக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது. -216

## ஷெல் தாக்குதலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் பத்துக்கு மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன மக்கள் குடியிருப்புகளை நோக்கி கூவிக்கொண்டு வந்த ஷெல் வீச்சினுல் அல்வாய் வடக்கு குமுதனையில் இளம் பெண்ணுன பாலச்சந்திரன் அபிராமி (வயது 17) என்பவர் வலது கையில படுகாயமடைந்து மந்திகை மருத்துவ மனையில சேர்க்கப்பட்டார். இவர்களின் வீட்டுக்கு முன்னுள் உள்ள ஆலயத்தின் பின் புறத்தில் வீழ்ந்த ஷெல்லினுலேயே இவர் காயமடைந்ததுடன் வீடும் மதில்களும் சேதமாகின. அருகிலுள்ள வீடுகளின் மதில்களும் முற்றுச் சேதமாகின.

இதேவேளை அல்வாய் சாளம்பை பகுதியை நோக்கியும், மாயக்கை சின்னமுத்து கோவிலடியை நோக்கியும் இருஷெல்கள் ஏவப்பட்டன. இச்ஷெல்கள் பயன்தரு மரங்கள்பல முறிந்து வீழ்ந்தன.

புலோலி தம்பசிட்டியில் இளையதம்பி "இராசரத்தினம்" என்பவர் வீட்டின் பின்புறத்தில் வீழ்ந்த ஷெல்லினுல் அவ்வீட்டில் இரு அறைகள் சேதமாகின. சுவர்கள் பெரும் துவாரமிடப்பட்ட நிலையில் காணப்பட்ட நிலையில் காணப்பட்டது படுக்கை அறையில் யன்னல்கள் கண்ணாடிகள் நொருங்கியும் கட்டில்கள் சிதறுண்டும் போயுள்ளன. வீட்டிலுள்ளோர் பாதுகாப்பு தேடியமையால பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

சுமார் 45 நிமிடநேர ஷெல் வீச்சின் பின்னர் மழையும் சோவென்று பொழியத் தொடங்கியது. 160-சி

# இராசி பலன்

09-05-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு சித்திரை—26)

நவமி மு. ப. 11-30வரை, மகம் பி. ப. 1-14 வரை, சித்தயோகம், இராகு காலம் பி. ப. 2-54 முதல் 4-24வரை. சுபவேளை காலை 10-24 முதல் 11-54 வரை.

மேஷம்: பிறர் வன்மம், வேலைபழு, பசப்புவார்த்தை.

இடபம்: நண்பர் குறை, தொழில் நஷ்டம், அமைதியின்மை.

மிதுனம்: தியாக சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, அவசர பயணம்.

கடகம்: சகோதர பகை, வீண் விரயம் சபலபுத்தி.

சிம்மம்: மேலோர் சந்திப்பு, அதிகார மேன்மை, காரிய சித்தி.

கன்னி: விதண்டாவாதம், மனச்சஞ்சலம், அகாலஉணவு.

துலாம்: அதிகாரிகள் பாராட்டு, உறவினர் நன்மை, தியானம்.

விருச்சிகம்: தொழில் முதலீடு, எதிர்பாராத நன்மை, முதியவர் சிந்தை.

தனுசு: தொழில் சங்கடம், அஜீரணக் கோளாறு, மனக் கவலை.

மகரம்: வீண்பழி, வேலைக் கஷ்டம், தாயார் துன்பம்.

கும்பம்: அறிஞர் சந்திப்பு, வருவாய் அதிகரிப்பு, காரிய சிறப்பு.

மீனம்: வாக்கு வன்மை, வெளியார் பாராட்டு, குடும்ப செலவு.

- ஜோஸ்யர்

## கௌரவிப்புவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். நோயாளர் நலன்புரி சங்கம் ஆதரவில் குருதிக் கொடை அளித்தவர்களை கௌரவிக்கும் 'விழா' நோயாயாளர் நலன்புரி சங்கம் நடுவப் பணியகத்தில் இம் மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-00மணிக்கு நடைபெறும்.

# தேசவிரோத செயல்களில் ஈடுபட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிற்குத் துணைபோவோர் இருப்பது வேதனைக்குரியதே.

எமது விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்காக பல்வேறு வழிகளிலும் சதா முயன்று கொண்டிருக்கும் எதிரியானவன் அற்ப சலுகைகளுக்காகவும், சொற்ப பணத்திற்காகவும் ஆட்பட்டு தான் பிறந்த மண்ணையும், தன் சொந்தச் சோதரரையும் எதிரிக்கு விற்கத் துணியும் அடிவருடிகளை எமக்கெதிராக ஏவிவிட்டுக் கொண்டே இருக்கின்றுன், ஆனுலும் விடுதலையை அவாவி நிற்கும் எம் தாயக மக்களின் விழிப்புணர்வினுலும் அவர் தம் ஒத்துழைப்பாலும் காலத்திற்குக் காலம் இவ்வாறுன துரோகத்தனங்களை எம்மால் அடையாளம் காண முடிகின்றது.

அண்மைக்காலங்களில் இவ்வாறுன துரோகிகள் ஐவர் எம்மால் கைதுசெய்யப்பட்டு அவர்களது துரோகத்தனங்களும் அடையாளம் காணப்பட்டு விசாரணைகளும் பூர்த்தியடைந்த நிலையில் உள்ளன. அவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

பெயர்:
முருகுப்பிள்ளை பூலோகராசா
முகவரி:
செம்மலை, அலம்பில்,
மணலாறு.

சிட்டா என்று அழைக்கப்படும் மேற்படி பூலோகராசா தனது தொழில் நிமித்தமாக உடப்பிற்குச் சென்று வந்த வேளை இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த சம்பத், சுரேஸ் ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டு அவர்கள் மூலம் இராணுவ உளவுப் பிரிவின் முக்கிய நபரான முத்தலிப் என்பவரின் தொடர்பினைப் பெற்று, எமதியக்க முகாம்கள், நடவடிக்கைகள் போன்றவற்றைக் காட்டிக் கொடுத்துள்ளார்.

முல்லைத்தீவு, மணலாறு பகுதிகளில் அமைந்திருந்த பல முகாம்கள் இவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு அம் முகாம்கள் விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாவதற்கும் அத் தாக்குதல்களால் பல போராளிகள் வீரச்சாவடைவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

மேலும் முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள மாத்தளனில் லெப். கேணல் சாள்ஸ் அவர்களின் ஞாபகார்த்த தூபி திறப்புவிழா பற்றிய தகவல்களை இராணுவ உளவாளிகளுக்கு வழங்கியுள்ளார். இக் காட்டிக்கொடுப்பினுல் இந் நிகழ்வில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் மேஜர் மூர்த்தி மாஸ்ரர், உட்பட பல போராளிகள் வீரச்சாவடைவதற்கும், ஏதும் அறியாப் பச்சிளம் குழந்தைகள், அப்பாவிப் பொதுமக்கள் உட்பட இருபதிற்கும் மேற்பட்டோர்கள் உடல் சிதறிப் பலியானதற்கும் இவர் காரணமாக இருந்துள்ளார்.

பெயர்: விஞசி இராசதுரை

முகவரி:
பன்றிக்கெய்தகுளம்,
ஓமந்தை,
வவுனியா.

கிளி என்று அழைக்கப்படும் லொறி முதலாளியான மேற்படி இராசதுரை என்பவர் வவுனியா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை இராணுவ உளவுப் பிரிவின் முக்கிய நபரான முத்தலிப் என்பவரின் தொடர்பேற்பட்டு வவுனியாவில் உள்ள ஜோசப் இராணுவ முகாமிற்கு நேரடியாகச் சென்றுவரத்தொடங்கி காட்டிக்கொடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

தண்ணீரூற்று, ஒட்டி சுட்டான், கிளிநொச்சி போன்ற பகுதிகளில் அமைந்துள்ள பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை இராணுவ உளவுப் பிரிவிற்கு வழங்கியதுடன் அவை விமானத்தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

வியாபாரத்திற்காக இராணுவத்தினரிடமிருந்து சில அற்ப சலுகைகளைப் பெறுவதற்காகவும், தடைசெய்யப்பட்ட சாமான்களைக் கொண்டு வருவதற்கான அனுமதியைப் பெறுவதற்காகவுமே இவர் மேற்படி துரோகத்தனததில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெயர்: சின்னையா சங்கரப்பிள்ளை.

முகவரி; ஆனந்தபுரம், கிளிநொச்சி.

மேற்படி சங்கரப்பிள்ளை லொறி ஒன்றிற் சாரதியாக வவுனியாவிற்குச் சென்று வந்த வேளை இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த சமரவீர என்பவருடன் தொடர்பு ஏற்பட்டு பல காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். வவுனியாவிலுள்ள எமதியக்கத் தடை முகாம் நிலைவரங்களையும் அப் பகுதிகளில் போராளிகளின் நடமாட்டங்களையும் எதிரிக்குக் காட்டிக் கொடுத்ததன் மூலம் அப்பகுதி இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் அதில் இரு போராளிகள் வீரச்சாவடைவதற்கும் இவரே காரணமாக இருந்துள்ளார்.

இது போன்று கிளிநொச்சிப் பகுதியில் அமைந்திருந்த எமதியக்க முகாம்கள் சிலவற்றையும் எதிரிக்குக் காட்டிக் கொடுத்துள்ளார்.

பெயர்:
அழகன் சண்முகநாதன்
முகவரி:
சேனைத்திடல்,
நெடுங்கேணி,
முல்லைத்தீவு.

சண்முகம் என்று அழைக்கப்படும் மேற்படி சண்முகநாதன் வியாபார நோக்கமாக வவுனியா சென்றுவந்த வேளை இராணுவ உளவாளியான உபாலி என்பவரின் தொடர்பு ஏற்பட்டு புதுக்குடியிருப்பு நெடுங்கேணிப் பகுதியில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை எதிரிக்கு வழங்கியதுடன், சில முகாம்கள் விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

அத்தோடு அப்பாவிப் பொதுமக்களை எமது இயக்க ஆதரவாளர்கள் என்று காட்டிக் கொடுத்து அவர்கள் அநியாயமாக கைதுசெய்யப்படுவதற்கும் இவர் காரணமாக இருந்துள்ளார்.

பெயர்:
ஆண்டி அருணுசலம்,
முகவரி:
155ம் கட்டை,
விவேகானந்தா நகர்,
கிளிநொச்சி.

தாத்தா என்று அழைக்கப்படும் மேற்படி அருணுசலம் வியாபார நோக்கமாக வவுனியா சென்று வரும்போது இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி அத் தொடர்புகள் மூலமாக ஜோசப் இராணுவ முகாமிற்கு சென்றுவரத் தொடங்கினுர்.

எமதியக்க முகாம்களின் அமைவிடங்கள், மற்றும் போராளிகளின் செயற்பாடுகள் பற்றியதகவல்களையும் எதிரிக்கு வழங்கி வந்துள்ளார். சுமார் பத்திற்கும் மேற்பட்ட முகாம்கள் இவரால் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்குச் சன்மானமாக ஒரிரு முறை தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டுவருவதற்கான அனுமதியையும், ஒருதொகைப் பணத்தையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றிக்கு வழி வகுப்போம்

அன்பிற்குரிய மக்களே! எம் தாயகம் மீண்டுமொரு யுத்த களத்தினுள் தள்ளப்பட்டிருக்கின்றது. யுத்தம்எமக்குவிருப்பமான ஒன்றல்ல: ஆனுலும் எம் உரிமைகளைப்பெற எமக்கு அதைத்தவிரவேறுவழிஇல்லை. இந்நிலையில் எதிரியானவன் தனது முழுப்பலத்தையும் எம் மீது பிரயோகித்துள்ளதுடன், எதனது முப்படைகளையும் எமக்கு எதிராகக்கட்டவிழ்த்து விட்டுள்ளான். அத்தோடு மேற்படித் துரோகிகளையும் எம்மீது ஏவி விட்டுக் கொண்டிருக்கின்றுன்.

யுத்த களத்தில் எதிரிக்கு முகம் கொடுக்கும் அதேவேளை மேற்படி துரோகத் தனங்களிற்கும் எம்தாயகம் முகம் கொடுக்கவேண்டி உள்ளது. இத்துரோகிகள் எங்களிற்குள்ளேயே வாழ்கின்றுர்கள். போராட்டத்தின்மீது பற்றுக் கொண்டவர்கள் போன்று நடிக்கின்றுர்கள் இயக்கஆதரவாளர்கள் போன்றும் செயற்படுகின்றுர்கள். மேற்படி மறைப்பின்மூலம் மக்களை ஏமாற்றி எதிரிகளுக்குத் துணை போகின்றுர்கள்

யுத்தம் ஒன்றின் மூலம் எம் மக்களின் விடுதலை உணர்வை அழித்துவிடவோ, இப் போராடடத்தை வெற்றி கொள்ளவோ முடியாது என்பது எதிரிக்கு நன்கு தெரியும். மேற்படி துரோகிகளைப் பயன்படுத்துவதன் மூலம் எம் போராட்டத்தைச் சிதைப்பதற்கு எதிரி இன்னும் இன்னும் அதிகமாக முயன்றுகொண்டே இருப்பான் நாம் ஒவ்வொருவரும் விழிப்புடனும், பொறுப்புடனும், எச்சரிக்கையுடனும் இருப்பதன் மூலம் மேற்படி துரோகத் தனங்களை அடையாளம் கண்டு வெற்றிக்கு வழிவகுப்போம். விடுதலையை விரைவாக்குவோம்.

# நவீனரக ஆயுதங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன. புலிகள் எந்தவேளையிலும் இந்த முகாம்கள் மீது தாக்குதல்களைத் தொடுக்கலாம்.

புலிகளின் இந்தத் தாக்குதல்களை முறியடிப்பதற்காகவே அவசர அவசரமாக வெளிநாடுகளிலிருந்து நவீனரக ஆயுதங்களைத் தருவிப்பதில் அரசு இப்போது ஈடுபட்டிருக்கிறதாம்.

இதேவேளையில் வடபகுதி முகாம்களுக்கு இப்போது ஆயுதங்களையும் மற்றும் படையினர்க்குத் தேவையான உணவு வகைகளை விநியோகிப்பதிலும் அரசுக்கு பெரும் நெருக்கடியும், பிரச்னையும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதி முகாம்களைச் சுற்றி அதிகரித்து வரும் புலிகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் பார்த்துக் கொண்டு முகாமுக்குள் வீணே முடங்கிக் கிடக்க முடியாது.

ஆனுல் தாக்குதல் நடத்துவதற்கான அனுமதி இதுவரை இராணுவ அதிகாரிகளிடமிருந்தும அரசிடமிருந்தும் எமக்குக் கிடைக்கவில்லையென்று வடபகுதி முகாமைச் சேர்ந்த படை அதிகாரி ஒருவர் வானெலி மூலம் தொடர்பு கொணடபோது தெரிவித்துள்ளார்

கடந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் 1990-ம் ஆண்டு ஏற்பட்ட ஒரு நிலை மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளையில் புலிகள் வடபகுதி முகாம்களைத் தாக்கும் போது அவர்கள் தாக்குதல்களை முறியடிக்க பலநவீனரக ஆயுதங்கள் தேவைப்படுகின்றன என்று மற்றெரு படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும் படையினர்க்கு பாதுகாப்பு வழங்க விமானப்படையின் உதவி மிகவும் அவசியம். எனவே அரசு இதற்கென நவீனரக விமானங்களைக் கொள்வனவு செய்து விமானப்படையை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இ

# மட்டு. மாவட்டத்தில் கடல்வலய தடைச் சட்டம் தளர்த்தப்படும்!

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தடையிலிருக்கும் கடல்வலயத் தடைச்சட்டம் விரைவில் தளர்த்தப்படுமென்று மட்டக்களப்புமாவட்ட இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வாவியிலும், கடலிலும் மீன்பிடிப்பதற்கு முற்ருகத் தடைவிதிக்கப்பட்டிருப்பதிஞல் ஆயிரக்கணக்கான மீன்பிடி குடும்பங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இருப்பது பற்றி மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் இராணுவ உயர்அதிகாரிகளை சந்தித்து பேச்சுக்கள் நடாத்திஞர்.

இதனையடுத்து மேற்படி சட்டத்தை தளர்த்துவது பற்றி விரைவில் தெரிவிப்பதாக, மட்டக்களப்பு மாவட்ட இராணுவ அதிகாரி, எம், பி. பரராஜசிங்கத்துக்கு உறுதியளித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. வி-இ

# புல்மோட்டை முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் தஞ்சம்

(கொழும்பு)

இராணுவத்தின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து புல்மோட்டைப் பகுதியில் உள்ள பெருந்தொகையான முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புல்மோட்டைப் பகுதியில் நாலு முஸ்லிம்களை இராணுவத்தினர்சுட்டுக்கொன்றதைத் தொடர்ந்து, அங்குள்ள முஸ்லிம்கள் கடந்த இரு நாட்களாக அங்கிருந்து வெளியேறி அருகிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுவதாகவும், இதனுல் இப்பகுதியில் ஒருவித பதற்றநிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வி-இ

# பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாக ஜாக் ஷிருக் தெரிவானர்!

(பாரிஸ்)

பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாக கன்சவேட்டிவ் கட்சியைச் சேர்ந்த ஜாக்ஷிருக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பாரிஸ் நகரின் முதல்வரான திரு. ஷிருக், நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2வது கட்ட வாக்கெடுப்பில் 52 சதவீத வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியான மித்திரோனின் சோஷலிசக்கட்சிப் பிரதிநிதியான லயனல் ஜொஸ்பின் 48 சதவீத வாக்குகளைப்பெற்று தோல்வி அடைந்தார்.

முதலாவது கட்ட வாக்கெடுப்பிலும் திரு. ஷிருக் மூன்னணி வகித்தது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸில் கடந்த 14 வருடங்களாக ஆட்சிபுரிந்த சோஷலிசக் கட்சியின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. -வி-இ

# வலி-கிழக்கு உதைபந்தாட்ட சங்க உதைபந்தாட்ட போட்டிகள் 15-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15ம் திகதி முதல் ஆரம்பமாகின்றது.

இச்சுற்றுப் போட்டியில் மொத்தம் 30 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன. மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும் இப்போட்டியில் 'ஏ' பிரிவில் 8 கழகங்களும், 'பி' பிரிவில் 14 கழகங்களும், 'ஸி' பிரிவில் 17கழகங்களும் பங்கு பற்றுகின்றன.

'ஏ' பிரிவில் பங்கு பற்றும் 8 கழகங்களை இரண்டுபிரிவாகவும், 'பி' பிரிவில் பங்கு பற்றும் 14 கழகங்களையும் இரண்டு பிரிவாகவும், 'ஸி' பிரிவில் பங்கு பற்றும் 17 கழகங்களை மூன்று பிரிவாகவும் யிரித்து போட்டிகள் நடைபெறவுள்ளன.

# கொழும்பு செல்லும் பயணிகள் தொகை குறைவு

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து கொழும்பு வரும் பிரயாணிகள் தொகை மிகக் குறைந்து விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் தமிழர்கள் படையினரால் கைதுசெய்யப்படுவது நாளுக்குநாள் அதிகரித்து வருவதிஞலேயே வடபகுதியிலிருந்து தமிழர்கள் கொழும்புக்குச் செல்வதற்கு அஞ்சுகின்றனராம்.

இந்நேரம் கொழும்பிலிருந்து ...ணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு தாண்டிக்குளம் ஊடாக வடபகுதிக்குச் செல்லும் லொறிகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்துவிட்டதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி இ)

## மாணவர் எழுச்சிநாள் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் 1995 தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பளை கல்விக் கோட்டத்திற்கு மு-ப 9-00 மணிக்கு பளை மத்திய கல்லூரியிலும் சாவகச்சேரி கல்விக் கோட்டத்திற்கு பி-ப 1-00 மணிக்குசாவகச்சேரிடிறியேக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. கே

## புலிகளின் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் விடுதலைப்புலிகளினுல் தீ மூட்டி எரிக்கப்பட்டன.

இத் தாக்குதலின்போது அமெரிக்க தயாரிப்பான எம்-16 ஏ இரண்டு கோல் கொமாண்டோக்கள் 15, ஜி. 3. எல். எம். ஜி. 01. ரி 56 ஒன்று ரக துபபாக்கி 01 எஸ் எல் ஆர் ரக துப்பாக்கி 01, ரி 56 ரவைக்கூடு 01, எம் 16 ஏ இரண்டு ரக சிறிய ரவைக்கூடுகள் 20, தொலைத்தொடர்பு சாதனம் 01, உருமறைப்பு வலை 03, எஸ். எல். ஆர். ரவைக்கூடுகள் 02, இராணுவ சப்பாத்து 03 சோடி, பொலிஸ் சப்பாத்து 05 சோடி, சாதாரண சப்பாத்து 01 சோடி. தலைக்கவசங்கள் 04, இராணுவ பைகள் 03, சாதாரண பைகள் 07, நேட்டோ ரவைகள் 150, நடுத்தர ரவைகள் 20, 5. 56 ரக ரவைகள் 1570, எம். ஏ. ரக ரவைக்கூடு தாங்கி அணிகள் 15. கவச அணிகள் 02, தண்ணீர் கான்கள் 05, இராணுவ பட்டிகள் 02, 40 மிலலி மீற்றர் எறிகணைகள் 04, புகைக்குண்டுகள் 09, ஜி 03 ரவைக்கூடுகள் 07, இராணுவ தொப்பிகள் 08, ஜே. ஆர். கைக்குண்டுகள் 07, எம். 16 ரவைக் கூடுகள் 09, மின் சூள்கள் 03, தொலைநோக்கி 01, பராலைற் 01 போன்ற ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகளின் இத்தாக்குதல் குறித்து சர்வதேச ஸ்தாபனங்கள் நேற்று முக்கியத்துவம் கொடுத்தன.

மூன்ருவது ஈழப்போரின் மூன்ருவது மிகப்பெரிய தாக்குதல் இது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருமலை துறைமுகத்தில் தரித்து நின்ற இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரணசுறு, சூர்யா போன்ற கப்பல்கள் விடுதலைப் புலிகளின் கடற்புலி பிரிவினரின் நீச்சல் பிரிவினுல் தகர்க்கப்பட்டதும், மட்டக்களப்பு கட்டுமுறிவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அழிக்கப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. -க

## புலிகளின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கூறுகையில்தெரிவித்ததாவது:

மோதல் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தில் புலிகள் கிழக்கு மாகாணத்தில் தங்கள் பலத்தையதிகரித்துக் கொண்டனர். இம்மோதல் தவிர்ப்பு ஒப்பந்த மீறலின் பின் பாதுகாப்புப் படையினர். கிழக்கு காட்டுப் பகுதிகளில் தீவிரவாதிகளின் முகாம்களைக் கண்டுபிடித்து தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் சில இடங்களில் வெற்றிகண்டபோதும், தீவிரவாதிகள் மறைந்திருந்து பாதுகாப்புப் படையினரை தாக்கி அவர்களின் ஆயுதங்களையும் தொடர்பு சாதனங்களையும் எடுத்துச் சென்றுவிடுகின்றனர்.

விடுதலைப் புலிகள் விமானங்களைச் சுட்டு வீழ்த்த ஏவுகணைகளைப் பாவிக்கத் தொடங்கிய பின் இராணுவநடவடிக்கைகள் வெகுவாக பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ராணுவ நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் ஹெலிகொப்டர்களின் சேவைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. இதனுல் காயப்பட்டவர்களை எடுததுச் செல்வது படையினர்க்கு தேவையான உபகரணங்களை வழங்குவது ஆகிய சேவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனுல் பாதுகாப்பு படையினர் மத்தியில் ஆத்திரமும் சீற்றமும் காணப்படுகிறது எனவும் கூறினுர். கே-இ

# தெற்கில் பெருவெள்ளம் போக்குவரத்து துண்டிப்பு

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் சடும் மழைகாரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

புத்தளம் நகர்ப்பகுதி, புத்தளம்-அனுராதபுரம்வீதி, மற்றும் சுற்றுப்புறங்களிலும் வெள்ளம் ஏற்டட்டுள்ளது. அப்பிரதேசத்திலுள்ள குளங்கள் உடைத்துப் பெருகியுள்ளன இப்பகுதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுழ்ளது.

மொனருகலை, வெலிஓயாப் பகுதிகளில சில பாதைகளில் 8 அடி உயரத்திற்கு வெள்ளம் ஏற்பட்டு பாதை தடைப்பட்டுள்ளது.

கிளிகதேன - ஹட்டன் வீதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

களுத்துறை, மத்துகம பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கடும் மழைவெள்ளம் காரணமாக சில பிரதேசங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. (கே இ)

## புலிகளின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணுப் முகர்ஜி கடந்த ஞாயிறறுக்கிழமை பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய பேட்டியை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் சிங்கள சேவை இதனைத் தெரிவித்தது:

இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை குறித்து இரு நாடுகளுக்கு மிடையில் உயர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது

இதேவேளையில் இந்தியப் பாதுகாப்பை அதிகரிப்பது, ஸ்ரீலங்கா படையினர்க்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்குவது போன்ற உதவிகளை ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இந்தியப்பிரதமரிடம் கோரியிருக்கலாம் எனவும் தெரிவிககப்பட்டது. இ

## வணிகத் தென்றல் சஞ்சிகை வெளியீடு

[யாழ்ப்பாணம்]

இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரியின் வணிக மாணவர் மன்றம் 'வணிகத் தென்றல்' என்ற சஞ்சிகையை 11ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாயில் தற்காலிகமாக அமைந்திருக்கும் கல்லூரி மண்டபத்தில் வெளியிடவுள்ளது.

## கம்பன் விழா மீண்டும் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா மீண்டும் நாளை புதன்கிழமை காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும். இவ்விழா தொடர்ந்து எதிர்வரும் 14-ம் திகதிவரை நல்லூர் முருகனுலாய வீதியில் மைந்துள்ள விசேட பந்தலில் நடைபெறும். நாளை காலை நிகழ்ச்சியாக ஆய்வரங்கமும் மாலை நிழ்ச்யாகப் பட்டிமண்டபமும் இடம்பெறும். -இ

## பொது விடுமுறை தினம் மாற்றம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நாளைய (புதன்கிழமை 10-ம் திகதி) பொதுவிடுமுறைதினம் நாளை மறுதினம் 11-ம் திகதி வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு நேற்று அறிவித்தது. இ

## 10 பேர் பலி

(டில்லி)

இந்தியாவில் குஜராத்தில் நேற்று முன்தினம் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் பெண் ஆவார் பலர் காயமடைந்தனர். ம

# புலிகளின் அதிகரித்த தாக்குதலால் கிழக்கிலும் படைகள் முடங்கிவிடும்?

(லண்டன்)

அம்பாறையில் விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட அதிரடித் தாக்குதலானது கிழக்கில் படையினர் மேற்கொண்டு வந்த தேடுதல் நடவடிக்கையை முடக்கிவிடலாம் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்' வடக்கில் இலங்கை விமானப் படையினரின் இரு அவ்ரோ விமானங்கள் விடுதலைப் புலிகளினுல் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதால் வடபகுதி இராணுவ முகாம்களுக்குள் முடங்கிப் போயிருக்கும் படையினரைப்போல் கிழக்கிலும் படையினருக்கு பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய வலுவான ஓர் தாக்குதல் இது என்றும் தெரிவித்தது.

இதேவேளையில் கிழக்கில் விடுதலைப், புலிகள் கடந்த காலத்தில் தங்கள் நிலைகளை ஸ்திரப்படுத்தியுள்ளதாகவும் பி. பி. சி. தெரிவித்தது. க-இ

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613,